# திருப்புட்குழி ஸ்ரீவிஜயராகவப் பெருமாள் ஸன்னிதி அத்யாபக கைங்கர்யச் சுருக்கம்.

ஸ்ரீ உ. வே. P. K. சிங்கராசாரியார்

1- இந்த ஸன்னிதி தென்கலை ஸன்னிதி.

2. பாஞ்ச ராத்ரமுறைப்படி இங்குத் திருவாராதனம்.

3. தென்கலை பிரபந்தங்கள் மட்டும் தான் ஸேவிக்கலாம்.

4. வேத பாராயணம் உள்பட வேறெதுவும் ஸேவிக்கக்கூடாது என்பது நீதிமன்றத் தீர்ப்பு.

5. ஸேவை தொடங்கும்போது 'ஸ்ரீ சைலேச' என்றுதான் தொடங்க வேண்டும். சாதித்தருளாய் என்று தொடங்குவதில்லை.

6. அனத்யயன காலத்தில் உபதேச ரத்தினமாலை திருவாய்மொழி நூற்றந்தாதி ஸேவாகாலம்.

7. கூரத்தாழ்வான் சாற்றுமறைக்குப்பிறகே திருப்பல்லாண்டு தொடக்கம்.

8. திருவீதிப் புறப்பாடுகளில் கோஷ்டி தொடங்கும்போதும் முடிக்கும் போதும் ஸ்ரீ சடகோபன் ஸாதிப்பது இல்லை.

9. இராப்பத்து சாற்றுமறையன்று ஆழ்வார் திருவடி தொழுதல் என்றகட்டத்தில் 'ஆழ்வாரை ஸாதித்தருளவேணும்' என்று பிரார்த்திக்கும் உரிமை அத்யாபகர்களுக்கே ஏற்பட்டுள்ளது.

10. திருமஞ்சனகாலங்களில் அத்யாபகருக்குத் திருத்துழாய் சரம் ஸமர்ப்பித்து ஸ்ரீ சடகோபன் சாதிக்கப்படுகிறது.

11. அத்தியாபக சுதந்திரப்ரஸாதத்தை அத்யாபகர்களே பெற்று, கோஷ்டியிலுள்ள மற்றவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பது வழக்கம். - இது நீதிமன்றத் தீர்ப்பு.

12. இந்த ஸன்னிதியில் உள்ள வேதாந்ததேசிகருக்கு மாத திருநக்ஷத்திரங்கள், வருஷ திருநக்ஷத்திர பத்து நாள் மகோத்ஸவம் நடக்கிறது. இக்காலங்களில் ஏகாந்த திருமஞ்சனம்: தீர்த்தம், ஸ்ரீ சடாரி, பிரசாத விநியோகம் எல்லாம் உண்டு. ஆனால், ஸேவாகாலமோ சாற்றுமறையோ கிடையாது; வழக்கமும் இல்லை.

13. ஸன்னிதியில் திரைக்குள் சொல்ல வேண்டிய மந்திரங்களை அர்ச்சகர்களே சொல்லவேண்டும். திரைக்கு வெளியில் திவ்யப்ரபந்த பாசுரங்களே ஸேவிக்க வேண்டும். தென்கலையாருக்கே அத்யாபக மிராசு பாத்யதை; வேறுயாருக்கும் எந்நாளும் கிடையாது. இது நீதிமன்றத்தின் தீர்ப்பு.

———